# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 6,977 — 1918 ம் ௵ கார்த்திகைமீ 14 ந் திகதி வியாழக்கிழமை.


## Part IV. — நான்காம் பாகம்.

### அரசாட்சியாரின் தேவைக்காகிய காணி விளம்பரங்கள்.

இலங்கை அரசாட்சிபண்ணும் மேன்மைதங்கிய உத்தியோகஸ்தர் அவர்களால் 1876 ம் ஆண்டு 3 ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்குகீழும் 1911 ம் ஆண்டு 10 ம் இலக்க கட்டளைச்சட்டத்தின் 3 ம் பிரிவினால் திருத்தப்பட்ட பிரகாரம் தகுந்தவிதமாக கற்பிக்கப்பட்டதினிமித்தம் 16,434 ம் பிரதமைப் படத்தில் குறித்திருக்கிற 7 ம் லொட்டின் கீழ்கண்டிருக்கிற லொட்டை அரசாட்சியாருக்காக எடுப்பதற்கு கட்டளைபெறும் நோக்கத்துக்காக மேல்மாகாணத்தின் நகரசங்க எல்லைகைமானத்துக்குள் அடங்கிய கொள்ளுப்பிட்டியிலிருக்கும் இடத்தை பிரசித்த வேலைக்காக அதாவது T டிஸ்திறிக்கில் மலைத்தண்ணீர் விடுவதற்கு கான்கட்ட தேவையாயிருக்கிறது.

| லொட். | காணியின் பெயர். | விவரம். | உருத்தாளியின் பெயர். | ஏ. | ரூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 7 | வரிப்பணம் நொம்பர் 18 A குரிய இடத்தில் பகுதி.. | வெறும் இடம் | பொல்வத்தை சென்ட் மைக்கல்க் கோவி டிரஸ்டிமார் | 0 | 0 | 12·84 |

7 ம் பிரிவின் தத்துவத்தைக்கொண்டு நாம் இத்தால் பிரசித்தமாய் அறிவிப்பது என்னவென்றால் மேற்சொல்லிய நிலத்தை சொந்தமாக எடுப்பதற்கு அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள். சொல்லப்பட்ட நிலங்களுக்கு உருத்தான சகலரும் 1918 ம் ஆண்டு மார்கழிமீ 16 ந திகதி திங்கட்கிழமை பின்னேரம் 1 மணிக்கு கொழும்பு நகரசங்க கந்தோரில் தானாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் என் முகதாவில் வந்து நிற்கும்படியும் அந்த இடங்களுக்கு தங்களுக்கு இருக்கிற உருத்துகள் எவ்விதமென்றும் அந்த உருத்துகளின் விவரங்களும் அதின் நிமித்தம் அவர்களுக்குடைய தொகை எவ்வளவென்றும் அந்த உருத்துகளுக்குப் பதிலாக அவர்கள் கேட்கிற பணத்தொகை எவ்வளவென்றும் அறிவிக்கும்படி இத்தால் கட்டளைபண்ணப்படுகிறது.

கொழும்பு நகரசங்க கந்தோர்,
1918 ம் ௵ கார்த்திகைமீ 12 ந் ௳.

ஆர். டவ்லிவ். வேர்ட்,
நகரசங்க சபாநாயகரும் கொழும்பு மேயரும்.

---

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் கொடிகாமத்துச் சந்தைக்கு அதிக நிலஞ்சேர்த்தல் என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது:—

பிரதமபடத்து இல. 4,175. குறிச்சி—கொடிகாமம். காணியினது பெயர்—கட்டைபறித்தான்.

| துண்டு. | விபரம். | உரித்தாளியின் பெயர். | ஏ. | ரூ. | ப. |
|---|---|---|---|---|---|
| M 18 | தென்னந்தோட்டம் .. | கணபதியார் கைம்பெண் சின்னாச்சியும் சிறுபிள்ளைகள் பொன்னையா நடராசா, பொன்னையா வேலுப்பிள்ளை அல்லது கணபதிப்பிள்ளை .. | 0 | 0 | 20·62 |
| N 18 | ஷை .. | கார்த்திகேசு சிதம்பரப்பிள்ளை .. .. .. | 0 | 0 | 17 37 |
| O 18 | ஷை .. | கார்த்திகேசு ஞானம்பலவாணர் .. .. .. | 0 | 0 | 6 75 |
| P 18 | தென்னையும் பனையும் .. | கந்தையா வேலுப்பிள்ளை முருகேசர் கதிர்காமர் கார்த்திகேசர் கந்தையர் .. .. .. .. | 0 | 1 | 4·25 |
| Q 18 | கொட்டில்களும் புளியமரமும் .. .. | கந்தையா வேலுப்பிள்ளை .. .. .. | 0 | 0 | 16 37 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனை செய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சி ஒப்புகொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1918 ம் ௵ மார்கழி மாசம் 3 ந் தேதியிலன்று ஒரு மணிகு இயாழ்ப்பாணக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுகொள்ளப்படுகின்றது.

இயாழ்ப்பாணக் கச்சேரி,
1918 ம் ௵ கார்த்திகைமீ 4 ந் ௳.

பீ. ஹோர்ஸ்பரொ,
அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் நிந்தவூரில் அரசாட்சியாரின் தமிழ்பாடசாலை அமைப்பதற்கென்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது:—

பிரதமபடத்து இலக்கம் 5,338. குறிச்சி—நிந்தவூர்.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | ஏ. | ரூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | பள்ளிவளவு .. | பள்ளிக்கூடமுள்ளதென்னைவளவு | கல்முனை றோமன்கத்தோலிக்கசபை | 0 | 2 | 34·1 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஹு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனை செய்திருப்பதனுல், அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிருர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1918 ம் ஹு மார்கழிமாதம் 10 ந் தேதியிலன்று பிற்பகல் ஒன்றரை மணிக்கு மட்டுக்களப்புக்கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிககும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுககொள்ளப்படுகின்றது.

மட்டுக்களப்புக் கச்சேரி, 1918 ம் ஹு கார்த்திகைமீ 6 ந் உ.

ஆர். ஏ. ஜி. வெஸ்ரிங், கிழ்மாகாண அரசாட்சி ஏசண்டு.

---

உரிமைபெறும பாழ்நிலத்தின் முன்னறிவித்தலகளைக குறித்த விளம்பரங்கள்.

[அறிவித்தல் இல. 7,050, அம்பாந்தோட்டை.]

இதன்பின் சொல்லப்படும் காணிகளுள் ஒன்றிலேனும் பலவிலேனும் எவ்வித உடந்தையாயினுந் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள் 1918 ம் ஹு (நவம்பர்) கார்த்திகைமீ 15 ந் தேதி துவக்கம் மூன்று மாசத்திற்குள், 1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் பாணிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் எ. எல். குரூஸ்மன் துரை அவர்களிடம் கொழும்பிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்துமூலமாயேனுந் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில், சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய் சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு சொல்லிய காணிகளை அல்லது அவைகளுள் உரித்துப்பேசப்படாதனவற்றை முடிக்குரி ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்துமூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

எ. எல். குரூஸ்மன், விசேஷ உத்தியோகத்தர்.

சுட்டிய காணிகளின் விவரம்.

தென் மாகாணம் அம்பாந்தோட்டை டிஸ்திறிக்கைச்சேர்ந்த கிருவபத்து மேற்கில் மோதரவான என்னுங் கிராமத்திலுள்ள இத்துட னிணைக்கப்படும் படப்பிரதிகளில்* விபரித்தபடியே கீழ்க்குறிக்குங் காணித்துண்டுகள் :—

I.—பிரதமபடம் 264.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. றூ. ப. |
|---|---|---|
| 64 | பலவத்த | 0 1 35 |

எல்லைகளாவன: வடக்கு-றனசிங்க ஆராச்சிக்கே பபுனேயும் இன்னெருவரும் உரித்தாடும் பலவத்த; கிழக்கு-முடிக்குரிய விதானகன்கானன்கேவத்த ; தெற்கு-271,519 ம், 267,261 ம் உ. ப. ல் காணும் காணிகள் ; மேற்கு-முடியால் விற்கப்பட்ட பாலுவத்தயேன (301,361 ம் உ. ப. ல் காணும் காணி.)

II.—பிரதம படம் 264.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|
| 159B | கிரமகேமகாவத்த | 1 0 31 |

எல்லைகளாவன: வடக்கு-அகங்கமலியனகே டொன் அந்திரிசும் மறுபேரும் உரித்தாடும் அமுபிற்றனிய; கிளக்கு-பினிதியகே டியோனிஸ்வும் மறுபேரும் உரித்தாடும் மெதுறுப்பேவத்த ; தெற்கு-266,874 ம் உ. ப. ல் காணும் காணி, முடியால் விற்கப்பட்ட மாறகாகேன, (313,012 ம் உ. ப ல். காணும் காணி) முடியால் விற்கப்பட்ட மாறகாயேன (313,461 ம் உ. ப. ல் காணும் காணி) முடியால் விற்கப்பட்ட மாறகாயேன (313,484 ம் உ. ப. ல் காணும் காணி; மேற்கு-முடிக்குரியயொன்தெகிகாயேன.

*இங்கிலீசின் மூன்ரும் பாகம் 2141—2142 ம் பக்கங்களின் படங்களைப் பார்க்குக.

[அம்பாந்தோட்டை வி. உ. 16—1918.]

---

[அறிவித்தல் இல. 7,051, அம்பாந்தோட்டை.]

இதன்பின் சொல்லப்படும் காணிகளுள ஒன்றிலேனும் பலவிலேனும் எவ்வித உடந்தையாயினுந் தங்களுக்குண்டெ உரித்துப்பேசுவோர்கள் யாருமிருநதால் அவர்கள் 1918 ம் ஹு (நவம்பர்) கார்த்திகைமீ 15 ந் தேதி துவக்கம் மூன்று மாசத்திற்குள் 1897 ம், 1899 ம், 1900 ம் 1903 ம் ஆண்டுகளின் பாணிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் எ. எல். குரூஸ்மென் துரை அவர்களிடம் கொழும்பிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனுந் தங்களுககுண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில், சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைககொண்டு சொல்லிய காணிகளை அல்லது அவைகளுள் உரித்துப்பேசப்படாதனவற்றை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்து மூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

எ. எல். குரூஸ்மென், விசேஷ உத்தியோகத்தர்.

சுட்டிய காணிகளின் விவரம்.

தென் மாகாணம் அம்பாந்தோட்டை டிஸ்திறிக்கைச்சேர்ந்த கிருவபத்து மேற்கில் பல்லேவாவ்வ என்னும் கிராமத்திலுள்ள இத்துட னிணைக்கப்படும் படப்பிரதியில்* விவரித்தபடியே, கீழ்க் குறிக்குங் காணித்துண்டுகள் :—

பிரதமபடம் 269.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. றூ. ப. |
|---|---|---|
| 7 | கொடஎல (வெட்டுவாய்க்கால்) | 0 3 26 |
| 8 | நீரோட்டம் | 0 3 1 |
| 9 | கிரமஆர (நீரோட்டம்) | 1 0 0 |
| | | 2 2 27 |

எல்லைகளாவன: வடக்கு-உடவாவ்வ கிராம எல்லை, மெதவாவ்வ கிராம எல்லை, கதுருலியத்த கிராம எல்லை ; கிளக்கு-கதுருலியத்த கிராம எல்லை ; தெற்கு-கினட்டிகாத்தாமுன கிராம எல்லை, கக்குஅவாமுல்ல கிராம எல்லை; மேற்கு-யட்டிகல கிராம எல்லை, உடவாவ்வ கிராம எல்லை.

கவனிப்பு.—மேற்குறிக்கப்பட்ட எல்லைகளுக் குட்பட்டனவாகிய கீழ்க்குறிக்குங் காணித்துண்டுகள் இவ்வறிவித்தலினின்றும் விலக்கப்பட்டிருக்கிறன வென்பதையும் அவைகளின் விசாலத் தொகையாகும் 104 ஏக்கர் 3 றூட் 33 பேட்சின் எப்பகுதியாயினும் கீழ்க்குறிக்கப்பட்ட 2 ஏக்கர் 2 றூட் 27 பேட்சில் அடங்கவில்லை யென்பதையுங் கவனிக்கவேண்டியது :—

பிரதமபடம் 269.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. | காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|---|
| A 1 | ஆச்சிககேமுலானகும்புற | 0 3 10 | A 2A | பறனவலவ்வத்த அல்லது உடாகொட்வெ | 0 2 35 |
| A 2 | ஆச்சிக்கேவத்த | 4 0 30 | A 2B | கல்மில்லகாயேன | 11 3 16 |

* இங்கிலீசின் மூன்ரும் பாகம் 2143 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்குக.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. | று. | ப. |
|---|---|---|---|---|
| A 2C | உடாகும்புற அம்மக .. | .. 0 | 2 | 15 |
| A 2D | கிரமன்டுபிற்றனிய .. | .. 0 | 3 | 20 |
| A 2E | கல்பில்லகாயேன (பாதைக்கு சேமிக்கப் பட்ட நிலம்) .. | .. 0 | 1 | 8 |
| A 2F | ஷை ( ஷை ) | .. 0 | 0 | 24 |
| A 2G | ஆரேமாயேன்யாய .. | .. 23 | 0 | 20 |
| A 2H | பேரகாகொறட்டுவவும் பிறவும் | .. 15 | 0 | 3 |
| A 3 | போகாவத்த .. | .. 4 | 1 | 8 |
| A 3A | கலுவாகேவத்த அல்லது மீத்திரிகேவத்த | 0 | 2 | 14 |
| A 3B | கிக்ஞகேவத்த .. | .. 0 | 2 | 18 |
| A 3C | கல்கொடவத்த .. | .. 0 | 1 | 16 |
| A 4 | தாறபெரியமுலானவும் பிறவும் | .. 30 | 1 | 26 |
| A 5 | வலறுப்பவும் பிறவும் .. | .. 10 | 3 | 0 |
| A 6 | கன்சபாவபாதை .. | .. 0 | 1 | 10 |
| | | 104 | 3 | 33 |

[அம்பாந்தோட்டை வி. உ. 17—1918.]

---

[அறிவித்தல் இல. 7,052, அம்பாந்தோட்டை.]

இதன்பின் சொல்லப்படும் காணிகளுள் ஒன்றிலேனும் பலவிலேனும் எவ்வித உடந்தையாயினுந் தங்களுகுண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால் அவர்கள் 1918 ம் ௵ (நவம்பர்) கார்த்திகைமீ 15 ௳ தேதி துவக்கம் மூன்று மாசத்திற்குள் 1897ம் 1899 ம் 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் பாணிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் ஏ. எல் குரேுஸ்மன் துரை அவர்களிடம் கொழும்பிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகாமுகயேனும் எழுத்து மூலமாயேனுந் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில் சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமகு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு சொல்லிய காணிகளை அல்லது அவைகளுள் உரித்துப்பேசப்படாதனவற்றை முடிக்குரிய ஆதமெனனத் தமது கைச்சாத்திட்டு எழுத்து மூலமாய் வெளிப்படுத்துவார்கள் என்பதை அறிந்துகொள்க.

ஏ. எல். குரேுஸ்மன்,
விசேஷ உத்தியோகத்தர்.

சுட்டிய காணிகளின் விபரம்.

தென்மாகாணம் அம்பாந்தோட்டை டிஸ்திறிக்கைச்சேர்ந்த கிருவபத்து மேற்கில் முல்கிரிகல என்னுங் கிராமத்தைச்சேர்ந்த இத்துடனிணைக்கப்படும் படப்பிரதிகளில்* விவரித்தபடியே கீழ்க்குறிக்கும் காணித்துண்டுகள் :—

I.—பிரதமபடம் 241.

| காணித்துண்டு. | | காணியின் பெயர். | விசாலம், ஏ. று. ப. |
|---|---|---|---|
| 16 | .. | மாகடவலவெவ (குளம்( .. .. .. .. | 18 1 3 |

எல்லைகளாவன: வடக்கு-பாழ்நிலக் கட்டளைச்சட்டத்தின்படி முடிக்குரியதென தீர்க்கப்பட்ட லின்பொக்குனேயாய. பாழ்நிலக் கட்டளைச்சட்டத்திறபடி முடிக்குரியதென தீர்க்கப்பட்ட தலுகொடல்லயாய; கிழக்கு-பாழ்நிலக கட்டளைச்சட்டத்தின்படி முடிககுரிய தெனத்தீர்ககப்பட்ட தலுக்கொடல்லயாய; தெற்கு-முல்கிரிகல விதானை உரித்தாடும் மாகடவலவெவ, பாழ்நிலக் கட்டளைச்சட்டத்தினபடி முடிக்குரியதென தீர்ககப்பட்ட கபறகட்டுயாய; மேறகு-பாழ்நிலக் கட்டளைச்சட்டத்தின்படி கிராமத்தாருக்குரியதென தீர்ககப்பட்ட தனகாகேன.

II.—பிரதமபடம் 241.

| காணித்துண்டு. | | காணியின் பெயர். | விசாலம், ஏ. று. ப. |
|---|---|---|---|
| 49½ | .. | அடிப்பாதை .. .. .. .. .. | 0 0 9 |

எல்லைகளாவன: வடக்கு-முடியால் விற்கப்பட்ட கலுஅகாவத்த, (310,732 ம் உ. ப. ல் காணும் காணி); கிழக்கு-ஆர். எல். செடியாளவும் மறுபேரும் உரித்தாடும் முலனகும்புறயாய; தெற்கு-முல்கிரிகல விதானை உரித்தாடும் முதியான்செகேவத்த; மேற்கு-கிராமத்தாருக்குரிய தடகன்கெந்தெகேவத்துயாய.

III.—பிரதமபடம் 241.

| காணித்துண்டு. | | காணியின் பெயர். | விசாலம், ஏ. று. ப. |
|---|---|---|---|
| 70A | .. | தன்காகேன (ரோட்டுக்கு சேமிக்கப்பட்ட நிலம்) .. .. | 0 2 20 |
| 71C | .. | ஷை ( ஷை ) .. .. | 0 0 20 |
| | | | 0 3 0 |

எல்லைகளாவன: வடக்கு-காவத்தவிலிருந்து வீரகெற்றியவுககுப் போகும் ரோட்டு; கிழக்கு-முலகிரிகல பான்சாலைக்காறர் உரித்தாடும் எற்பன்கென்யாய, கிராமத்தாருக்குரிய தன்காகேன, முடியால் விற்கப்பட்ட தன்காகேன, (311,168 ம் உ. ப. ல் காணும் காண); தெறகு-பாழ்நில கட்டளைச்சட்டத்தின்படி முடிக்குரியதென தீர்க்கப்பட்ட வல்பொத்தகேகேன; மேற்கு-காவத்தவிலிருந்து வீரகெற்றியவுக்கு போகும் ரோட்டு.

*இங்கிலீசின் மூன்றும் பாகம் 2143—2144 ம் பக்கங்களின் படங்களைப் பார்க்குக.

[அம்பாந்தோட்டை வி. உ. 18—1918.]

---

[அறிவித்தல் இல. 7,053, அம்பாந்தோட்டை.]

இதன்பின் சொல்லப்படும் காணிகளுள் ஒன்றிலேனும் பலவிலேனும் எவ்வித உடந்தையாயினுந் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள் 1918 ம் ௵ (நொவம்பர்) கார்த்திகைமீ 15 ௳ தேதி துவக்கம் மூன்று மாசத்திற்குள், 1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் பாணிலச் சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் எ.எல். குரேுஸ்மன் துரை அவர்களிடம் கொழும்பிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்துமூலமாயேனுந் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில் சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு சொல்லிய காணிகளை அல்லது அவைகளுள் உரித்துப்பேசப்படாதனவற்றை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்து மூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

எ. எல். குரேுஸ்மன்,
விசேஷ உத்தியோகத்தர்.

சுட்டிய காணிகளின் விவரம்.

தென் மாகாணம் அம்பாந்தோட்டை டிஸ்திறிக்கைச்சேர்ந்த கிருவபத்து மேற்கில் பெடிகம என்னும் கிராமத்திலுள்ள இத்துடனிணைக்கப்படும் படப்பிரதிகளில்* விவரித்தபடியே கீழ்கருறிக்கும் காணித்துண்டுகள் :—

I.—பிரதமபடம் 261.

| காணித்துண்டு. | | காணியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|
| 11s | .. | ரோட்டுக்குச் சேமிக்கப்பட்ட நிலம் .. .. .. | 0 0 12 |

எல்லைகளாவன: வடக்கு-முடிக்குரிய கியம்பலகாகேன்யாய; கிழக்கு-கே. எச். மென்டிஸ்சில்வா உரித்தாடும் இன்னிகாகேன அல்லது மைலகாகேன; தெற்கு-முடிக்குரிய மைலகாகேனகால்ல (காற்பாதைககுச் சேமிக்கப்பட்ட நிலம்); மேற்கு-327,275 ம் உ. ப. ல் காணும் காணி.

*இங்கிலீசின் மூன்றும் பாகம் 2144—2146 ம் பக்கங்களின் படங்களைப் பார்க்குக.

II.—பிரதமபடம் 261.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. று. ப. |
|---|---|---|
| 33A .. | ரோட்டுக்குச் சேமிக்கப்பட்ட நிலம் .. .. .. | 0 1 2 |

எல்லைகளாவன: வடக்கு-முடிக்குரிய இன்கினிகாகேன (குறுக்கு ரோட்டுக்குச்சேமிக்கப்பட்ட நிலம்); கிழக்கு-மண்டாவவிலிருந்து நலகமவுக்குப் போகும் ரோட்டு; தெற்கு-முடிக்குரிய இனகினிகாகேன; மேற்கு-218,460 ம் உ. ப. ல் காணும் காணி.

III.—பிரதமபடம் 261.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. று. ப. |
|---|---|---|
| 278H .. | ரோட்டுக்குச் சேமிக்கப்பட்ட நிலம் .. .. .. | 0 1 1 |
| 278K .. | ஷை .. .. .. .. | 0 1 10 |
| | | 0 2 11 |

எல்லைகளாவன: வடக்கு-ஒரு ரோட்டு; கிழக்கு-முடிக்குரிய நத்மல்வலவத்தேகெல்ல, 201,302 ம் உ. ப. ல் காணும் காணி, முடிக்குரிய லொலுகாவத்தேகெல்ல, முடிக்குரிய நருன்கஸ்கேன, மந்தாவவிலிருந்து நலகமவுக்கு போகும் ரோட்டு; தெற்கு-ரோட்டு; மேற்கு-216,123 ம் உ. ப. ல் காணும் காணி, முடியால் விற்கப்பட்ட கோன்கா அல்லது வியன்கஸ்ஆதேவத்த, (320,559 ம் உ. ப. ல் காணும் காணி), 216,123 ம் உ. ப. ல் காணும் காணி, முடியால் கூலிக்குக் கொடுக்கப்பட்ட அல்லது குத்தகைக்குக் கொடுக்கப்பட்ட வியன்கஸ்ஆதேவத்த, நலகமவிலிருந்து மந்தாவவுக்கு போகும் ரோட்டு.

IV.—பிரதமபடம் 261.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. று. ப. |
|---|---|---|
| 278J .. | ரோட்டுக்குச் சேமிக்கப்பட்ட நிலம் .. .. .. | 0 0 29 |

எல்லைகளாவன: வடக்கு-201,530 ம் உ. ப. ல் காணும் காணி; கிழக்கு-பாழ்நிலக் கட்டளைச்சட்டத்தின்படி முடிக்குரியதாகத் தீர்க்கப்பட்ட றுக்கத்தனகேனகெல்ல (கரத்தைப்பாதைக்குச் சேமிக்கப்பட்ட நிலம்); தெற்கு-ரோட்டு; மேற்கு-முடிக்குரிய கப்புறுலாகே வலேவெவ (குளம்).

V.—பிரதமபடம் 261.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. று. ப. |
|---|---|---|
| 10D .. | மாறமண்டியகேன அல்லது உகபிற்றிய .. .. .. | 44 2 32 |

எல்லைகளாவன: வடக்கு-319,479 ம் உ. ப. ல் காணும் காணி, கே. டி. ஏ. அப்புகாமி உரித்தாடும் மாறமண்டிய; கிழக்கு-வித்தாறனதெனியக் கிராம எல்லை; தெற்கு-டி. சி. ஜி. பண்டாறனுபக உரித்தாடும் ஒப்பறகாவகடகேன, 320,175 ம் உ. ப. ல் காணும் காணி; மேற்கு-கஅகல்விகாறகோவிற் சொந்தக்காரர் உரித்தாடும் பின்முலன.

[அம்பாந்தோட்டை, வி. உ. 19—1918.]

---

[அறிவித்தல் இல. 7,054, கேகாலை.]

இதன்பின் சொல்லப்படும் காணியில் எவ்வித உடந்தையாயினுந் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள் 1918 ம் ஹூ (நொவம்பர்) கார்த்திகை 15 ந் தேதி துவக்கம் மூன்று மாசத்திற்குள், 1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் பாழ்நிலச் சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் பிறெட்றிக் ஹாயின்ஸ் துரை அவர்களிடம் கொழும்பிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனுந் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில் சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு உரித்துப்பேசப்படாததாகிய சொல்லிய காணியைமுடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்துமூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

பிறெட்றிக் ஹாயின்ஸ்,
விசேஷ உத்தியோகத்தர்.

சுட்டிய காணியின் விவரம்.

சப்பிரகாமுவா மாகாணம் கேகாலை டிஸ்திறிக் கினிகொட கோறளையைச்சேர்ந்த வல்கம்பத்தில் தம்புல்ல என்னும் கிராமத்திலுள்ள இத்துடனிணைக்கப்படும் படப்பிரதியில்* விவரித்தபடியே 2 றூட் 3 பேர்ச்சு விஸ்தாரமுடையதும் 139 ம் பிரதமபடத்தில் 12 ம் காணித்துண்டாய்க் காட்டப்படுவதும் சாமானியமாய் அத்ததேனியகேன என்னும் பெயரினால் அறியப்பட்டு அல்லது அழைக்கப்பட்டு வருவதுமான காணித்துண்டு. இதற்கெல்லைகளாவன: வடக்கும் கிழக்கும்-பாழ்நிலக் கட்டளைச்சட்டத்தின்படி முடிக்குரியதாகத் தீர்க்கப்பட்ட தம்புலுகந்தேமுகலன; தெற்கு-முடியால் விற்கப்பட்ட பமுனுவலேகேன (318,292 ம் உ. ப. ல் காணும் காணி), லெ. ம. அ. அப்துல்றகுமன் உரித்தாடும் அத்ததேனியவத்த; மேற்கு-பாழ்நிலக் கட்டளைச்சட்டத்தின்படி முடிக்குரியதாகத் தீர்க்கப்பட்ட தம்புலுகந்தேமுகலன.

*இங்கிலீசின் மூன்றும் பாகம் 2146 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்குக.

[கேகாலை வி. உ. 17—1918.]

---

[அறிவித்தல் இல. 7,055, களுத்துறை.]

1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் வெண் நிலங்களைப்பற்றிய அறிவித்தல்.

இதிலே பின்னர்ச் சொல்லப்படும் காணியிலே ஏதும் உடந்தையுள்ளவர்களென உரித்துப்பேசுபவர்கள் யாருமுண்டானால், அவர்கள் 1918 ம் ஹூ (நொவம்பர்) கார்த்திகைமீ 15 ந் தேதியிலிருந்து மூன்று மாசத்துள்ளே களுத்துறைக் கச்சேரியில் களுத்துறை டிஸ்திறிக்குகளின் உதவி அரசாட்சி ஏசென்று அவர்கள் முகதாவில் அல்லது எழுத்து மூலமாகத்தெரிபட்டு சொல்லப்பட்ட காணிக்கு அல்லது அதிலே யாதும் உடந்தைக்கு உரித்துண்டெனச் சாதித்தாலன்றி, சொல்லப்பட்ட காணி உதவி அரசாட்சி ஏசென்று அவர்களுக்கு சொல்லப்பட்ட சட்டங்களினால் கொடுக்கப்பட்டிருக்கும் தத்துவங்களின் பிரகாரம் உரித்துப்பேசப்படாததாகிய குறித்த காணி முடிக்குரிய என அவர்களுடைய கையொப்பத்தோடு எழுத்திலே வெளிப்படுத்துவார்கள் என்பதை அறிந்துகொள்க.

ஓ. வீ. பிறெயின்,
களுத்துறை உதவி அரசாட்சி ஏசென்று.

குறித்த காணியின் விபரம்.

மேல் மாகாணம் களுத்துறை டிஸ்திறிக் பஸ்துன்கோறளை கிழக்கிலுள்ள மகாபத்துதெற்கில் பதுறெலிய என்னுங் கிராமத்திலுள்ள இத்துடனிணைக்கப்படும் படப்பிரதியில்* விவரித்தபடியே கீழ்க்குறிக்குங் காணித்துண்டு:—

பிரதமபடம் 15,793.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. று. ப. |
|---|---|---|
| 6453 .. | பறகேவத்தேபிற்ற (குறுக்கு ரோட்டுக் காகச்சேமிக்கப்பட்ட நிலம்) .. | 0 1 11 |

எல்லைகளாவன: வடக்கு-322,653 ம், 322,596 ம் உ. ப. ல் விபரிக்கப்படும் காணிகள்; கிழக்கு-256,667 ம் உ. ப. ல் விபரிக்கப்படும் காணி; தெற்கு-அகலவத்தையிலிருந்து பதுறெலியாவுக்குப் போகும் ரோட்டு; மேற்கு-முடி தனக்குரியதென்று சொல்லுகிற பறலகேதெனிய.

*இங்கிலீசின் மூன்றும் பாகம் 2147 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்குக.

[அறிவித்தல் இல. 7,056, களுத்துறை.]

1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் வெண் நிலங்களைப்பற்றிய அறிவித்தல்.

இதிலே பின்னர்ச் சொல்லப்படும் காணி அல்லது காணிகளில் உடந்தையுள்ளவர்களென உரித்துப்பேசுபவர்கள் யாருமுண்டானால், அவர்கள் 1918 ம் ஹூ (நொவம்பர்) கார்த்திகைமீ 15 ந் தேதியிலிருந்து மூன்று மாசத்துள்ளே களுத்துறைக் கந்தோரில் மேல்மாகாணம் களுத்துறை உதவி அரசாட்சி ஏசென்று அவர்கள் முகதாவில் முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனுந் தெரிபட்டு சொல்லப்பட்ட காணிகளுக்கு அல்லது ஒன்றிலேனுக்கும் அதிலே யாதும் உடந்தைக்கு உரித்துண்டெனச் சாதித்தாலன்றி, சொல்லப்பட்ட உதவி அரசாட்சி ஏசென்று அவர்களுக்கு மேற்சொல்லப்பட்ட சட்டங்களினால் கொடுக்கப்பட்டிருக்கும் தத்துவங்களின் பிரகாரம் உரித்துப்பேசப்படாததாகிய குறித்த காணிகள் அல்லது அப்படிப்பட்டவர்கள் முடிக்குரிய என அவர்களுடைய கையொப்பத்தோடு எழுத்திலே வெளிப்படுத்துவார்கள் என்பதை அறிந்துகொள்க.

சி. வி. பிறேயின்,

குறிக்கப்பட்ட காணிகளின் விபரம். களுத்துறை உதவி அரசாட்சி ஏசென்று.

மேல்மாகாணம் களுத்துறை டிஸ்திறிக் பஸ்துன் கோறளை கிழக்கில் மகாபத்து தெற்கில் மகுற என்னும் கிராமத்திலுள்ள இத்துடனிணைக்கப்படும் படப்பிரதியில்* விபரித்தபடியே, கீழ்க்குறிக்கும் காணித்துண்டுகள் :—

பிரதமபடம் 16,493.

| காணித்துண்டு. | | காணியின் பெயர். | | விசாலம், ஏ. ரூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | .. | அத்துன்ககாகொடல்ல (றோட்டுக்காகச் சேமிக்கப்பட்ட நிலம்) | .. | 0 1 17 |
| 2 | .. | ஷை ( ஷை ) .. | .. | 0 0 27 |
| 8 | .. | எலபொடகும்புறேதெனியும் என்றவாலதிகனேகொடல்ல (பின்பாறவுக்குச் சேமிக்கப்பட்ட நிலம்) .. .. .. | .. | 0 0 13 |
| 11 | .. | சுதுவேலியன்ன (பின்பாறவுக்குச் சேமிக்கப்பட்ட நிலம்) .. | .. | 0 0 4 |
| | | | | 0 2 21 |

எல்லைகளாவன: வடக்கு-முடி தனக்குரியதென்று சொல்லுகிற சுதுவெலிமன்ன; கிழக்கு-271,712 ம், 298,954 ம், 271,712 ம், 305,936 ம் உ. ப. ல் விபரிக்கப்படும் காணிகள், முடி தனக்குரியதென்று சொல்லுகிற ஏன்டவலடிகனேகொடல்ல, பதுறெலியாவிலிருந்து கெடிகல்லவுக்குப் போகும் றோட்டு; தெற்கு-முடி தனக்குரியதென்று சொல்லுகிற எலபொடகும்புற; முடி தனக்குரியதென்று சொல்லுகிற எலபொடகும்புறேடெனிய, 306,482 ம் உ. ப. ல் விபரிக்கப்படும் காணி, முடி தனக்குரியதென்று சொல்லுகிற சுதுவெலிமன்ன; மேற்கு-முடி உரித்துப்பேசாத சுதுவெலிமன்ன(16,493 ம் பிரதமபடத்திலுள்ள 4 ம் நம்பர் துண்டுக்காணி), பதுறெலியவிலிருந்து கெடிகல்லவுக்குப் போகும் றோட்டு, முடி தனக்குரியதென்று சொல்லுகிற சுதுவெலிமன்ன.

*இங்கிலீசின் மூன்றும் பாகம் 2147 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்குக.

---

[அறிவித்தல் இல. 7,057, களுத்துறை.]

1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் வெண் நிலங்களைப்பற்றிய அறிவித்தல்.

இதிலே பின்னர்ச்சொல்லப்படும் காணி அல்லது காணிகளில் உடந்தையுள்ளவர்களென உரித்துப்பேசுபவர்கள் யாருமுண்டானால், அவர்கள் 1918 ம் ஹூ (நொவம்பர்) கார்த்திகைமீ 15 ந் தேதியிலிருந்து மூன்று மாசத்துள்ளே களுத்துறைக் கந்தோரில் மேல்மாகாணம் களுத்துறை உதவி அரசாட்சி ஏசென்று அவர்கள் முகதாவில் முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனும் தெரிபட்டு சொல்லப்பட்ட காணிகளுக்கு அல்லது ஒன்றிலேனுக்கும் அதிலே யாதும் உடந்தைக்கு உரித்துண்டெனச் சாதித்தாலன்றி, சொல்லப்பட்ட உதவி அரசாட்சி ஏசென்று அவர்களுக்கு மேற்சொல்லப்பட்ட சட்டங்களினால் கொடுக்கப்பட்டிருக்கும் தத்துவங்களின் பிரகாரம் உரித்துப்பேசப்படாததாகிய குறித்த காணிகள் அல்லது அப்படிப்பட்டவைகள் முடிக்குரிய என அவர்களுடைய கையொப்பத்தோடு எழுத்திலே வெளிப்படுத்துவார்கள் என்பதை அறிந்துகொள்க.

சி. வி. பிறேயின்,

குறிக்கப்பட்ட காணிகளின் விவரம். களுத்துறை உதவி அரசாட்சி ஏசென்று.

மேல் மாகாணம் களுத்துறை டிஸ்திறிக் பஸ்துன் கோறளை மேற்கில், இட்டகொடபத்துவில் கேனகம என்னும் கிராமத்திலுள்ள இத்துடனிணைத்திருக்கும் படப்பிரதிகளில்* விபரித்தபடியே கீழ்க்குறிக்கும் காணித்துண்டுகள் :—

I.—பிரதமபடம் 15,990.

| காணித்துண்டு. | | காணியின் பெயர். | | விசாலம், ஏ. ரூ. ப. |
|---|---|---|---|---|
| 3 | .. | டெல்காகொடல்ல (நீரோட்டத்துக்குச் சேமித்த நிலம்) .. | .. | 2 2 5 |

எல்லைகளாவன: வடக்கு-அரசாட்சி யுரித்துச்சொல்லும் டெலகாகொடல்ல: கிழக்கு-அரசாட்சி யுரித்துச்சொல்லும் டெலகாகொடல்ல (15,990 ம் பிரதம படத்திலுள்ள முதலாம் துண்டிக காணி), 321,415 ம் உரிமைப்படத்தில் விபரிக்கப்படும் காணி; தெற்கு-அரசாட்சி யுரித்துச்சொல்லும் தெல்காகொடல்ல; மேற்கு-மெனிகொடஎல.

II.—பிரதமபடம் 15,990.

| காணித்துண்டு. | | காணியின் பெயர். | | விசாலம், ஏ. ரூ. ப. |
|---|---|---|---|---|
| 4 | .. | டெல்காகொடல்ல (பாதைக்காகச் சேமித்த நிலம்) .. | .. | 0 0 14 |

எல்லைகளாவன: வடக்கும் கிழக்கும்-227,696 ம் உரிமைப்படத்தில் விபரித்திருக்கும் காணி; தெற்கு-227,700 ம் உரிமைப்படத்தில் விபரித்திருக்கும் காணி; மேற்கு-321,415 ம் உரிமைப்படத்தில் விபரித்திருக்கும் காணி.

*இங்கிலீசின் மூன்றும் பாகம் 2148 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்குக.

---

கேள்விப்பத்திரங்களைப்பற்றிய அறிவித்தல்.

"உப்பு ஏற்றுமதிபண்ணிக் கொவர்ண்மேந்தின் புத்தளம் குதங்களில் நிறுத்துக்கொடுக்கிறதற்கென்று" மேல் உறையில், எழுதி முத்திரிக்கப்பட்ட கேள்விப்பத்திரங்களை உடன்படிக்கைபண்ணிக்கொள்ள விருப்பமுள்ளவர்களிடமிருந்து புத்தள உதவி கொவர்ண்மேந்து ஏசன்றுத்துரை அவர்களால் 1918 ம் ஆண்டு கார்த்திகைமாதம் 29 ந் திகதி 1 மணி வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும், அஃதாவது :—

புத்தளம் மேல்கரை, கீழ்கரை, தில்லையடி கொம்பிமுனை பச்சைககாட்டுமுதல் உப்பளங்களில் 1918 ம் ஆண்டு பெரும்போகத்தில் சேர்க்கப்பட்டிருக்கும் உப்பை புத்தளத்திலிருக்கும் உப்பு களஞ்சியங்களுக்கு ஏற்றுமதிபண்ணி நிறுத்துக் குவிக்கும் பஞ்சிவிடைக்காக.

கேள்விக்காரர்கள் இதன்பின்னால் சொல்லப்படும் ஏற்பாடுகளைக் கவனிக்கக்கடவர்கள் :—

1. சாக்குகளுக்கு வாய்கட்டி ஏற்றுமதிபண்ணிக் கொண்டுவந்து குதத்தில் நிறுத்து கொடுக்கிறதற்கு 1,000 அந்தருக்கு என்ன வீதமென்று விபரித்துக் காட்டவேண்டும்.

2. கேள்விக்காரன் நாளொன்றுக்கு 1,450 அந்தர் நிறுத்து ஒப்புக்கொடுக்கவேண்டும். அப்படியே கேள்விக்காரன் நிறைவேற்றத் தவறினால், தவறின நாளைக்கு புத்தளம் உதவி ஏசன்றுத்துரையுடைய பிரியப்படிக்கு ரூபாய் பத்து தெண்டனை விதிக்கப்படும்.

3. மேற்குறித்த வேலை 1919 ம் ஆண்டு தைமாதம் முதற் கிழமையிற் துவங்கவேண்டும்.

4. ஒவ்வொரு கேள்விக்காரரும் கேள்விகேட்கமுதல் எந்தக் கச்சேரியிலாவது ரூபா 200 ஒடுக்கவேண்டும். அவ்விதமே காசுகட்டாத ஒரு கேள்வியாவது ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. கொந்திறுத்தைச் சரியாக நடப்பிக்கிறதற்கு 1,000 ரூபாய் கொண்ட பொறுப்பான பிணைகொடுக்க அல்லது பொருந்த உடன்படிக்கைபண்ணிக்கொள்ளத் தவறினால், இந்தக் கட்டின பணம் கொவர்ண்மேந்துக்காகப் பறிமுதலாக்கப்படும். பறிமுதலாக்கப்படாத கட்டின பணம் கேள்விக்காரருக்குத் திரும்பக்கொடுக்கப்படும்.

5. கொந்தீசு அல்லது கடிதங்களை கிடைக்கத்தக்கதாக கேள்விக்காரன் புத்தளத்தில் ஓர் மேல்விலாசத்தைக் கொடுக்கவேண்டியது.

6. இந்தக் கொந்திருத்தைச் சரியாக நடைபெறுகிறதற்காகப் பிணைக்கு ஏற்படுகிறதாகிய இரண்டு போதிய ஆள்களால் கையொப்பமிடப்பட்டு அவர்களின் மேல்விலாசம் எழுதப்பட்ட ஒரு கடிதமும் ஒவ்வொரு கேள்விப்பத்திரத்துடனும் அணைத்திருக்க வேண்டியது.

7. கேள்வியின் வீதங்களையிட்டு ஏதும் மாற்றுதல் அல்லது திருத்தங்கள் பண்ணினால், அந்த இடத்திலே கேள்விககாரனின் கையொப்ப அடையாள மிடப்பட்டிருக்க வேண்டும்.

8. கேள்விப்பத்திரத்தின் இணைப்பிரதியொன்று கொழும்பிலிருக்கும் சங்கைபோர்ந்த கணக்குக்காரியத்தலைவர் அவர்களுக்கும் அதின் மூலப்பிரதியை புத்தளம் உதவி ஏசன்றுத் துரைக்கும் அனுப்பும் சமயம் கேள்விக்காரன் தபால் வளியாக அனுப்பவேண்டும்.

9. கேள்விக்கடதாசிகள் திறக்கப்படும் தினமன்று ஏதும் தேவையான கருமங்களையிட்டுப் பேசிக்கொள்வதற்காகக் கேள்விக்காரர் கச்சேரியில சமுகமாயிருக்கவேண்டியது.

10. பிணை உடன்படிக்கை கடுதாசிகள் சரிபிளை பார்க்கும் முடியின் தரணியின் சிலவுகள் அனுகூலப்படும் கொந்திருத்துக்காரனால் கொடுககப்படவேண்டும்.

11. உப்பு கொட்டுகள் கட்டியிருக்கும் மேடைகளுக்கு மேல் கரத்தைகளை விடக்கூடாதென்பதை கொந்திருத்து கேள்விககாரா கவனிக்கவேண்டியது.

எஸ். எம். பி. வேந்தர்கோன்,
உதவி அரசாட்சி ஏசன்றருக்காக.

புத்தளம் கச்சேரி,
1918 ம் ஆண்டு கார்த்திகைமீ 7 ந் உ.

---

"உப்பு ஏற்றுமதிபண்ணிக் கொவர்ணமேந்தின் நாச்சிக்களி குதங்களில் நிறுத்துக்கொடுக்கிறதற்கென்று" மேல் உறையில் எழுதி முத்திரிக்கப்பட்ட கேள்விப்பத்திரங்களை உடன்படிக்கைபண்ணிக்கொள்ள விருப்பமுள்ளவர்களிடமிருந்து புத்தளம் உதவிக் கொவர்ணமேந்து ஏசன்றுத்துரையவர்களால் 1918 ம் ஆண்டு கார்த்திகைமீ 29 ந் தேதி 1 மணி வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும், அஃதாவது :—

நாச்சிக்களி உப்பளங்களில் 1918 ம் ஆண்டு பெரும்போகம் உப்புசெய்கைபண்ணிச் சேர்த்துவைக்கப்பட்டிருக்கும் உப்பை ஏற்றுமதிபண்ணி நாச்சிக்களியிலிருக்கும் உப்புக் குதங்களுக்குக கொண்டுவந்து நிறுத்துக் குதங்களில் போட்டுக் கொடுக்கும் பணிவிடை.

கேள்விக்காரர் இதன்பின்னால் சொல்லப்படும் ஏற்பாடுகளைக் கவனிக்கக் கடவர்கள் :—

1. ஏற்றுமதிபண்ணிக் கொண்டுவந்து குதங்களில் நிறுத்து நிறைத்துக் கொடுக்கிறதற்கு 1,000 அந்தர் உப்புக்கு என்ன வீதமென்று விவரித்துச காட்டியிருக்கவேண்டியது.

2. கேள்விக்காரர் நாள் ஒன்றுக்கு 1,000 அந்தர் உப்பு கொண்டுவந்து நிறுத்து ஒப்புக்கொடுக்க ஆயித்தமாயிருக்க வேண்டும்.

3. ஒவ்வொரு கேள்விக்காரரும் கேள்வி கேட்க முதல் எந்தக் கச்சேரியிலாவது ரூபாய் 25 கட்டவேண்டும்; அவ்விதமே காசு கட்டாத ஒரு கேள்வியாவது ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. கொந்திருத்தைச் சரியாக நடப்பிக்கிறதற்கு 500 ரூபாய்கொண்ட உறுதிப்படுத்தப்பட்ட பிணைகொடுக்க அல்லது பொருந்த உடன்படிக்கைபண்ணிக்கொள்ளத் தவறினால், இந்தக் கட்டின பணம் கொவர்ணமேந்துக்காகப் பறிமுதலாக்கப்படும். பறிமுதலாக்கப்படாத கட்டினபணம் கேள்விக்காரருக்குத் திரும்பக் கொடுக்கப்படும்.

4. கொந்தீசு அல்லது கடிதங்களைப் பெற்றுக்கென்வாதற்காக கேள்விக்காரன் தனக்குப் பதிலாக புத்தளத்தில் ஓரிட விலாசத்தைக் கொடுககவேண்டியது.

5. இந்தக் கொந்திருத்துச் சரியாக நடைபெறுகிறதற்காகப் பிணைக்கு ஏற்படுகிறதாகிய இரண்டு போதிய ஆள்களால் கையொப்பமிடப்பட்டு அவர்களின் மேல்விலாசமும் எழுதப்பட்ட கடிதம் ஒவ்வொரு கேள்விப்பத்திரததுடனும் அணைத்திருக்கவேண்டியது.

6. கேள்வியின் வீதங்களையிட்டு ஏதும் மாற்றுதல் அல்லது திருத்தங்கள்பண்ணினால் அந்த இடத்தில கேள்விக்காரனின் கையொப்ப அடையாள மிடப்பட்டிருக்க வேண்டும்.

7. கேள்விப்பத்திரத்தின் இணைப்பிரதி கொழும்பு சங்கைபோர்ந்த அரசிறை காரியத்தலைவர் அவர்களுக்கும் அதின் மூலப்பிரதியை புத்தளம் உதவி கொவர்ணமேந்து ஏசன்றுத் துரையவர்களுக்கு அனுப்பவேண்டும்.

8. கேள்விக்கடதாசிகள் திறக்கப்படும் தினமன்று ஏதும் தேவையான கருமங்களையிட்டுப் பேசிக்கொள்வதற்காகக் கேள்விக்காரர் கச்சேரியில் சமுகமாயிருக்கவேண்டியது.

9. பிணை உடன்படிக்கை கடுதாசிகள் சரிபிளை பார்க்கும் முடியின் தரணியின் சிலவுகள் அனுகூலப்படும் கொந்திருத்துக்காரனால் கொடுககப்படவேண்டும்.

(கையொப்பம்) எஸ். எம். பி. வேந்தர்கோன்,
உதவி அரசாட்சி ஏசன்றருக்காக.

புத்தளம் கச்சேரி,
1918 ம் ஹூ கார்த்திகைமீ 7 ந் உ.

---

"உப்பு விலைக்கு வாங்குபவர்களுக்கு நிறுத்து ஏற்றுமதி பண்ணிககொடுகக" வென்று மேல் உறையில் எழுது முத்திரிக்கப்பட்ட கேள்விப்பத்திரங்களை உடன்படிக்கைபண்ணிக் கொள்ள விருப்பமுள்ளவர்களிடமிருந்து புத்தளம் உதவி ஏசன்றுத்துரையவர்களால் 1918 ம் ஆண்டு கார்த்திகைமீ 29 ந் தேதி பகல் 1 மணி வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும், அஃதாவது :—

1919 ம் ஆண்டில் புத்தளம் உப்பு டிப்பாற்மேந்தில் விற்கப்படும் உப்பை உதவி ஏசன்றுத்துரையவர்களனுமதிப்படி பாதைக்காரர்களுக்கும் கரத்தைக்காரர்களுக்கும் நிறுத்து ஒப்புக்கொடுக்கும் பணிவிடை.

கேள்விக்காரர் இதன்பின்னால் சொல்லப்படும் ஏற்பாடுகளைக் கவனிக்க வேண்டும் :—

1. பாதைக்காரர்களுக்கும் கரத்தைக்காரர்களுக்கும் உப்பு நிறுத்து ஏற்றுமதிபண்ணிககொடுகக 1,000 அந்தர் உப்புக்கு என்னவீதம் வேணுமென்று கேள்விக்காரர் வெவ்வேறாய் விவரித்துக் காட்டவேண்டியது.

2. போதிய கூலிஆட்களும் கரத்தைகளும் கூலிக்குப் பிடித்து நாள் ஒன்றுககு 2,000 அந்தர் உப்பு நிறுத்து ஏற்றுமதி பண்ணிக்கொடுக்க கேள்விக்காரர் ஆயத்தமாயிருக்க வேண்டும்.

3. ஒவ்வொரு கேள்விக்காரரும் கேள்விகேட்க முதல் எந்தக் கச்சேரியிலாவது ரூபாய் 500 ஒடுக்கவேண்டும்; அவ்விதமே காசு கட்டாத ஒரு கேள்வியாவது ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. கொந்திருத்தைச் சரியாக நடப்பிக்கிறதற்கு 1,000 ரூபாய் கொண்ட சுடுதிப்புப்பெற்ற பிணைகொடுக்க அல்லது பொருந்த உடன்படிக்கை பண்ணிக்கொள்ளத் தவறினால், இந்தக் கட்டின பணம் கொவற்ணமேந்துக்காகப் பறிமுதலாக்கப்படும். பறிமுதலாக்கப்படாத கட்டின பணம் கேள்விக்காரருக்கு திரும்பக் கொடுக்கப்படும்.

4. கொந்தீசு அல்லது கடிதங்களை பெற்றுக்கொள்வதற்காக ஒவ்வொரு கேள்விக்காரன் தனக்குப் பதிலாய்ப் புத்தளத்தில் ஒரு பெயர்வழியின் மேல்விலாசத்தைக் கொடுக்க வேண்டியது.

5. இந்த கொந்திருத்துச் சரியாக நடைபெறுதற்காகப் பிணைக்கு ஏற்படுகிறதாகிய இரண்டு போதிய ஆட்களால் கையொப்ப மிடப்பட்டு அவர்களின் மேல்விலாசமும் எழுதப்பட்ட கடிதம் ஒவ்வொரு கேள்விப்பத்திரத்துடனும் அணைத்திருக்க வேண்டியது.

6. கேள்வியின் வீதங்களையிட்டு ஏதும் மாற்றுதல் அல்லது திருத்தங்கள்பண்ணினால் அந்த இடத்தில் கேள்விக்காரனின் கையொப்ப அடையாள மிடப்பட்டிருக்க வேண்டும்.

7. கேள்விப்பத்திரத்தின் இணைப்பிரதி யொன்று கொழும்பிலிருக்கும் சங்கைபோர்ந்த வருமான காரியத்தலைவர் அவர்களுக்கும் அதின் மூலப்பிரதியைப் புத்தளம் உதவி ஏசன்றுத்துரை அவர்களுககும் அனுப்பும் சமையம் கேள்விக்காரன் தவால்வழியாக அனுப்பவேண்டும்.

8. கேள்விக்கடதாசிகள் திறக்கப்படும் அன்று ஏதும் தேவையான கருமங்களையிட்டுப் பேசிக்கொள்வதற்காகக் கேள்விக்காரர் கச்சேரியில் சமுகமாயிருக்க வேண்டியது.

9. எல்லாக் கேள்விப்பத்திரங்களையும் அல்லது எதையும் யாதாமொரு கேள்வியில்லாமல் தள்ளிப்போடுகிறதற்கு அரசாட்சியாருக்குத் தத்துவமுண்டு.

எஸ். எம். பி. வேந்தர்கோன்,
புத்தளங் கச்சேரி, உதவி யேசண்டருக்காக.
1918 ம் ஆண்டு கார்த்திகைமீ 7 ம் தேதி.

---

"உப்பு விலைக்கு வாங்குவோர்க்கு கற்பிட்டிக் குதங்களால் 1919 ம் ஆண்டில் கொடுக்கப்படும் உப்பை நிறுத்துப் பாதைகளுக்கும் கரத்தைகளுக்கும் ஏற்றுமதிபண்ணிக் கொடுக்க" வென்று மேல்உறையில் எழுதி முத்திரிக்கப்பட்ட கேள்விப்பத்திரங்களை உடன்படிக்கைபண்ணிக்கொள்ள விருப்பமுள்ளவர்களிடமிருந்து புத்தளம் உதவி ஏஜன்றுத்துரை அவர்களால் 1918 ம் ஆண்டு கார்த்திகைமீ 29 ந் தேதி 1 மணிவரைக்கு ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விக்கார இதன்பின்னில் சொல்லப்படும் ஏற்பாடுகளைக் கவனிக்க வேண்டியது :—

(a) பாதைகளுக்கும் கரத்தைகளுக்கும் உப்பு நிறுத்து ஏற்றுமதிபண்ணிக் கொடுக்க (1,000) ஆயிரம் அந்தர் உப்புக்கு என்ன வீதமென்று காட்டியிருக்க வேண்டும்.

(b) நாள்தோறும் கூடியளவு 1,200 அந்தர் உப்புக்குக் குறைவுபடாமல் நிறுத்து ஏற்றுமதிபண்ணிக்கொடுக்க கேள்விக்காரர் ஆயத்தமாயிருக்க வேண்டியது.

(c) கேள்விககாறர் 1918 ம் ஆண்டு கார்த்திகைமீ 29 ந் தேதிக்கு முன்னே எந்தக் கச்சேரியிலாவது (ரூபாய் 100) நூறு ரூபாய் கட்டவேண்டும். நியமிக்கும் நியாயமான நாளைக்குள் பொருந்த உடன்படிககை பண்ணிககொள்ளத் தவறினுல், இந்தக கட்டின பணம் கவற்ணமேந்துக்காக பறிமுதலாக்கப்படும். கச்சேரி ரிசிட் கேள்விப்பத்திரத்துடன் அணைகக வேண்டும்.

(d) கேள்விப்பத்திரத்தின் இணைப்பிரதி யொன்று கொழும்பிவிருக்கும் சங்கைபோர்ந்த கணக்குக் காரியத்தலைவர் அவர்களுக்கும் அதின் மூலப்பிரதியைப் புத்தளம் உதவி யேசன்றுத்துரை அவர்களுக்கும் அனுப்புஞ் சமயம் கேள்விக்காரர் தவ்வால வழியாக அனுப்பவேண்டும்.

(e) கொந்தீஸ் அல்லது கடிதங்களைப் பெற்றுக்கொள்ளுவதற்காக கேள்விககாரர் புத்தளத்தில் தங்களுடைய பெயரையும் தாஙகளிருககு மிடத்தையும்பற்றி மேல்விலாசத்தைக் கொடுக்கவேண்டும்.

இவைகளைப்பற்றிய இன்னும் மேலதிகமான விளம்பரங்களை உப்புத்துரை யவர்களிடம் விளுவி அறிந்துகொள்ளலாம்.

எஸ். எம். பி. வேந்தர்க்கோன்,
புத்தளம் கச்சேரி, உதவி ஏசன்றுத்துரைக்காக.
1918 ம் ஸ்ரீ கார்த்திகைமீ 7 ந் உ.

---

"உப்பு விலைக்கு வாங்குவோர்க்கு நாச்சிக்களி குதங்களிவிருந்து 1919 ம் ஆண்டில் கொடுக்கப்படும் உப்பை நிறுத்துப் பாதைகளுக்கும் கரத்தைகளுக்கும் ஏற்றுமதிபண்ணிக்கொடுக்க" வென்று மேலுறையிலெழுதி முத்திரிக்கப்பட்ட கேள்விப்பத்திரங்களை உடன்படிககை பண்ணிககொள்ள விருப்பமுள்ளவர்களிடமிருந்து புத்தள உதவி ஏசன்றுத்துரையவர்களால் 1918 ம் ஆண்டு கார்த்திகையாதம் 29 ந் திகதி பிற்பகல் 1 மணி வரைக்கும் ஏற்றுககொள்ளப்படும்.

கேள்விக்காரர்கள் இதன்பின்னுல் சொல்லப்படு மேற்பாடுகளைக் கவனிக்கவேண்டியது :—

(a) பாதைகளுக்கும் கரத்தைகளுக்கும் உப்பு நிறுத்து ஏற்றுமதிபண்ணிக்கொடுக்க (1,000) ஆயிர மந்தர் உப்புக்கு என்னவீத மென்று காட்டியிருக்க வேண்டும்.

(b) நாள்தோறும் கூடியாளவு 1,200 அந்தர் உப்புக்குக் குறையாமல் நிறுத்து ஏற்றுமதிபண்ணிககொடுக்க கேள்விக்காறர் ஆயித்தமாயிருக்க வேண்டியது.

(c) கேள்விக்காறர் 1918 ம் ஆண்டு கார்த்திகைமாதம் 29 ந் திகதிக்குமுன்னே எந்தக கச்சேரியிலாவது ரூபா 50 கட்ட வேண்டும். கச்சேரி றிசிட் கேள்விப்பத்திரத்துடன் அணைக்கவேண்டும். நியமிக்கும் நியாயமான நாளைக்கு பொருந்த உடன்படிக்கைபண்ணிக்கொள்ளத் தவறினுல் இந்தக் கட்டின பணம் அரசாட்சிக்குப் பறிமுதலாக்கப்படும்.

(d) கேள்விப்பத்திரத்தின் இணைப்பிரதியொன்று கொழும்பிலிருக்கும் சங்கைபோர்ந்த வருமான காரியத்தலைவர் அவர்களுககும் அதின் மூலப்பிரதியை புத்தளம் உதவி ஏசன்றுத்துரை அவர்களுககு அனுப்பும் சமயம் கேள்விக்காறர் தபால் வழியாக அனுப்பவேண்டியது.

(e) அறிவித்தல் அல்லது கடிதங்களைப் பெற்றுக்கொள்வதறகாக கேள்விக்காறர் புத்தளத்தில் ஓரிட விலாசம் கொடுககவேண்டும்.

(f) இவைகளைப்பற்றிய இன்னு மேலதிகமான விபரங்களை உப்புத்துரை யவர்களிடம் விளுவி யறிந்துகொள்ளலாம்.

எஸ். எம். பி. வெந்தார்கோன்,
புத்தளம் கச்சேரி, உதவி ஏசன்றுத்துரைக்காக.
1918 ம் ஸ்ரீ கார்த்திகைமீ 7 ந் தேதி

"உப்பு ஏற்றுமதிபண்ணிக் கொவற்ணமேந்தின் கற்பிட்டி குதங்களில் நிறுத்து ஏற்றுமதிபண்ணி கற்பிட்டி குதங்களில் நிறுத்து ஒப்புககொடுக்கிறதற்கென்று" மேல் உறையில் எழுதி முத்திரிககப்பட்ட கேள்விப்பத்திரங்களை உடன்படிக்கைபண்ணிக்கொள்ள விருப்பமுள்ளவர்களிடமிருந்து புத்தள உதவி கொவற்ணமேந்து ஏசன்றுத்துரையவர்களால் 1918 ம் ஆண்டு கார்த்திகைமாதம் 29 ந் திகதி பிற்பகல் 1 மணி வரைக்கும் ஏற்றுககொள்ளப்படும், அஃதாவது :—

கரைதீவு உப்பளங்களில் 1918 ம் ஆண்டு பெரும்போகம் உப்புசெய்கை பண்ணிச்சேர்த்து வைககப்பட்டிருக்கும் எல்லா உப்பையும் அவ்விடத்திலிருந்து நிறுத்து ஏற்றுமதிபண்ணி கற்பிட்டி உப்புக் குதங்களுக்குக் கொண்டுவந்து நிறுத்துக் குதங்களில் போட்டுக்கொடுக்கும் பணிவிடை.

கேள்விக்காரர் இதன்பின்னுல் சொல்லப்படும் ஏற்பாடுகளைக் கடவர்கள் :—

1. கரைத்தீவில் நின்று உப்பை சாக்குகளில் நிறைத்து அவைகளில் வாயை நன்றுய் நெருக்கிக் கட்டி கற்பிட்டி குதங்களுக் கொண்டுவந்து நிறுத்துக குதங்களில் போட்டுக் கொடுகக 1,000 அந்தர் உப்புககு என்ன வீதமென்றும் விபரித்துக் காட்டியிருகக வேண்டியது.

2. கேள்விககாரர் நாளொன்றுக்கு 1,000 அந்தர் உப்புக் கொண்டுவந்து நிறுத்து ஒப்புக்கொடுக்க ஆயித்தமாயிருக்க வேணடும்.

3. ஒல்வொரு கேள்விக்காரரும் கேள்விகேட்க முதல் கச்சேரியில் ரூபா 20 ஒடுக்கவேண்டும். அவ்விதமே காசு கட்டாத ஒரு கேள்வியாவது ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. கொந்திறுத்தைச் சரியாக நடப்பிக்கிறதற்கு 500 ரூபாய் கொண்ட சடுதிப்புப்பெற்ற பிணை கொடுக்க அல்லது பொருத்த உடன்படிக்கைபண்ணிக்கொள்ளத் தவறினுல், இத்தக கட்டின பணம் கொவற்ணமேந்துக்காகப் பறிமுதலாக்கப்படும். பறிமுதலாக்கப்படாத கட்டின பணம் கேள்விக்காரருக்குத் திரும்பககொடுக்கப்படும்.

4. கொந்திசு அல்லது கடிதங்களைப் பெற்றுக்கொள்வதற்காக கேள்விக்காரன் தனக்குப் பதிலாகப் புத்தலத்தில் ஒரு பெயர்வளியின் மேல்விலாசத்தைககொடுக்க வேண்டியது.

5. இந்தக் கொந்திறுத்தைச் சரியாக நடைபெறுகிறதற்காப் பிணைக்கு ஏற்படுத்தற்காகிய இரண்டு போதிய ஆள்களால் கையொப்பமிடப்பட்டு அவர்களின் மேல்விலாசமும் எழுதப்பட்ட கடிதம் ஒவ்வொரு கேள்விப்பத்திரத்துடனும் அணைத்திருக்க வேண்டியது.

6. முளு கேள்விப்பத்திரங்களை ஏதும் திருத்தங்கள் பண்ணினுல், அந்த இடத்தில் கேள்விக்காரனின் கையொப்ப அடையாளமிடப்பட்டிருக்க வேண்டியது.

7. கேள்விப்பத்திரத்தின்இணைப்பிரதியொன்று கொழும்பிலிருக்கும் சங்கைபோர்ந்த கணக்குக்காரியத்தலைவர் அவர்களுககும் அதின் மூலப்பிரதியை புத்தள உதவி கவர்ணமேந்து ஏசன்றுக்துரையவர்களுக்கு அனுப்பும் சமயம் கேள்விக்காரன் தபால் வளியாக அனுப்பவேண்டும்.

8. கேள்விக் கடதாசிகள் திறக்கப்படும் தினம் அன்று ஏதும் தேள்வையான கருமங்களையிட்டுப் பேசிக்கொள்வதறகாகக் கேள்விககாரர் கசசேரியில் சமுகமாயிருக்க வேண்டும்.

9. எல்லாக்கேள்விப்பத்திரங்களையும் அல்லது எதையும் யாதாமொரு கேள்வியில்லாமல் தள்ளிப்போடுகிறதற்கு அரசாட்சியாருககுத் தத்துவமுண்டு.

(கையொப்பம்) என். பீ. வேந்தர்கோன்,
உதவி அரசாட்சி ஏசறுக்காக.
புத்தளம் கச்சேரி,
1918 ம் ஆண்டு கார்த்திகைமீ 7 ந் உ.

---

## சுப்பிரீங்கோட்டு அறிவித்தல்.

இலங்கைத்தீவிற் சங்கைபோந்த சுப்பிறீங் கோட்டாரது கட்டளையின்படி நாம் பிரசித்தப்படுத்துவதாவது: கண்டி நியாயஸ்தலத்திலே மேற்சொல்லிய சுப்பிரீங் கோட்டாரால் வதுளை டிஸ்திரிகடைச்சேர்ந்த கிறிமினெல் வழககுவிசாரணை, 1918 ம் ஆணடு மார்கழி மாதம் 2 ந் திகதியாகிய திங்கட் கிழமை காலமே 11 மணி தொடங்கி அன்றும் அதற்கடுத்த நாட்களிலும் நடத்தப்படும்.

ஆதலால் அவ்விசாரணையிற் காரியகருமமுள்ளவர்களெல்லோரும் சொல்லப்பட்ட நேரத்திலே சொல்லப்பட்ட இடத்திலே வெளிப்பட்டு அவ்விடத்தினின்றும் உத்தரவின்றி நீங்காதிருக்கக்கடவர்கள்.

எப். மார்சல்,
பிஸ்காலுக்காக.

வதுளை பிஸ்கால் கந்தோர்,
1918 ம் ஸ்ரீ கார்த்திகைமீ 4 ந் உ.

இலங்கைத்தீவிற் சங்கைபோந்த சுப்பிறீங் கோட்டாரதுகட்டளையின்படி நாம் பிரசித்தப்படுத்துவதாவது: கண்டி நியாயஸ்தலத்திலே மேற்சொல்லிய சுப்பிறீங்கோட்டாரால் கண்டி டிஸ்திரிகடைச்சேர்ந்த கிறிமினெல் வழக்கு விசாரணை, 1918 ம் ஆண்டு டிசெம்பர்மாதம் 2 ந் திகதியாகிய திங்கர்கிழமை காலமே 11 மணி தொடங்கி அன்றும் அதற்கடுத்த நாட்களிலும் நடத்தப்படும்.

ஆதலால் அவ்விசாரணையிற் காரியகருமமுள்ளவர்களெல்லோரும் சொல்லப்பட்ட நேரத்திலே சொல்லப்பட்ட இடத்திலே வெளிப்பட்டு அவ்விடத்தினின்றும் உத்தரவின்றி நீங்காதிருக்கக் கடவர்கள்.

சி. எஸ். வோன்,
பிஸ்கால்.

கண்டி பிஸ்கால் கந்தோர்.
1918 ம் ஸ்ரீ நொவம்பர்மீ 6 ந் உ.

இலங்கைத்தீவிற் சங்கைபோந்த சுப்பிரீங் கோட்டாரது கட்டளையின்படி நாம் பிரசித்தப் படுத்துவதாவது: கண்டி நியாயஸ்தலத்திலே மேற்சொல்லிய சுப்பிரீங்கோட்டாரால் கேகாலே அவிசாவலே டிஸ்திரிக்டைச்சேர்ந்த கிரிமினெல் வழக்கு விசாரணை, 1918 ம் ஆண்டு மார்கழி மாதம் 2 ந் திகதியாகிய திங்கட் கிழமை காலமே 11 மணி தொடங்கி அன்றும் அதற்கடுத்த நாட்களிலும் நடத்தப்படும்.

ஆதலால் அவ்விசாரணையிற் காரியகருமமுள்ளவர்களெல்லோரும் சொல்லப்பட்ட நேரத்திலே சொல்லப்பட்ட இடத்திலே வெளிப்பட்டு அவ்விடத்தினின்றும் உத்தரவின்றி நீங்காதிருக்கக்கடவர்கள்.

பீ. கொன்ஸ்றன்றைன்,
பிஸ்கால்.

இரத்தினபுரி பிஸ்கால் கந்தோர்,
1918 ம் ஞு கார்த்திகைமீ 4 ந் உ.

இலங்கைத்தீவிற் சங்கைபோந்த சுப்பிரீங் கோட்டாரது கட்டளையின்படி நாம் பிரசித்தப்படுத்துவதாவது கண்டி நியாயஸ்தலத்திலே மேற்சொல்லிய சுப்பிரீங்கோட்டாரால் அநுராசபுரம் டிஸ்திரிக்டைச்சேர்ந்த கிரிமினல் வழக்கு விசாரணை, 1918 ம் ஆண்டு மார்கழிமாதம் 2 ந் திகதியாகிய திங்கட்கிழமை காலமே 11 மணிதொடங்கி அன்றும் அதற் அதற்கடுத்த நாட்களிலும் நடத்தப்படும்.

ஆதலால் அவ்விசாரணையிற் காரிய காரியகருமமுள்ளவர்களெல்லோரும் சொல்லப்பட்ட நேரத்திலே சொல்லப்பட்ட இடத்திலே வெளிப்பட்டு அவ்விடத்தினின்றும் உத்தரவின்றி நீங்காதிருக்கக்கடவர்கள்

ஈ. சி. டயஸ்,
வ. ம. மாகாணப் பிஸ்காலுக்காக.

அநுராசபுரம் பிஸ்கால் கந்தோர்,
1918 ம் ஞு கார்த்திகைமீ 2 ந் உ.

---

## சவுக்கிய சீர்திருத்தச் சங்கத்துக்கு தொழிலுக்குட்படாத அங்கத்தவர்களைத் தெரிவுசெய்தல்.

### வண்டாரவளைப் பட்டணத்தில் சுகாதார சீர்திருத்த சங்கத்தவர்களை நியமித்தற்பத்திரம்.

சுதேச சவுக்கிய தேர்ச்சி சங்கத்தைப்பற்றிய 1898 ம் ஆண்டு 13 ம் கட்டளைச்சட்டத்தின் 11 ம் 12 ம் பிரிவின் வரைவுப்பாட்டின்பிரகாரம் வண்டாரவளைப்பட்டணத்தின் சவுக்கிய தேர்ச்சிச் சங்கத்திற்கு அரசாட்சியாரின் பணிவிடையில்லாத அங்கத்தவர்கள் மூன்று பெயர்களை தெரிந்து அவர்கள் 1919 ம் ஆண்டு தைமாதம் 1 ந் திகதி துவக்கம் 1920 ம் ஆண்டு மார்கழிமாதம் 31 ந் திகதி வரைக்கும் இரண்டு வருடக்காலத்துக்கு உத்தியோகம் செய்யும்படி நியமிக்கும்பொருட்டு வண்டாரவளைக் கோட்டாபீசில் 1919 ம் ஆண்டு மாசிமாதம் 15 ந் திகதி பின்னேரம் இரண்டு மணிக்கு ஓர் சபை கூட்டப்படுமென்று இத்தால் அறிவிக்கிறேன்.

சங்கத்தலைவர்களைத் தெரிதல்செய்தற்குச் சம்மதம் கொடுப்பவர்கள் தாங்களே கூட்டத்திற்கு வரவேண்டும். பிரதியாட்களை யனுப்புத லேற்கப்படமாட்டாது. அங்கத்தவர்களாய் நியமிக்கப்பட விரும்புவோர் எழுத்துமூலமாகத் தங்கள் பேர்களைக் கொடுத்தலுடன் திச் சம்மதமளிக்கத்தகாதவர்களாயிருக்கிற இரண்டு ஆட்களால் அவ்வெழுத்துப்பத்திரம் கைதொப்பமிடப்பட்டு லோகசல்போட் ஆபீசில் 1918 ம் ஆண்டு மார்கழிமாதம் 10 ந் திகதி அல்லது அதற்குமுன்னே கொடுக்கப்பட வேண்டும்.

எப். பாட்லெற்,
பெரிய ஏஜண்டுத்துரையவர்கள்.

வதுளைக் கச்சேரி,
1918 ம் ஞு கார்த்திகை 8 ந் திகதி.

### வதுளைப்பட்டணத்தில் சுகாதார சீர்திருத்தச்சங்கத்தவர்களை நியமித்தற் பத்திரம்.

சுதேச சவுக்கிய தேர்ச்சிச் சங்கத்தைப்பற்றிய, 1898 ம் ஆண்டு 13 ம் கட்டளைச்சட்டத்தின் 11 ம், 12 ம் பிரிவின் வரைவுப்பாட்டின் பிரகாரம் வதுளைப் பட்டணத்தின் சவுக்கிய தேர்ச்சிச் சங்கத்திற்கு அரசாட்சியாரின் பணிவிடையி லிலலாத அங்கத்தவர்கள் மூன்றுபெயர்களை தெரிந்து அவர்கள் 1919 ம் ஆண்டு தைமாதம் 1 ந் தேதி துவக்கம் 1920 ம் ஆண்டு மார்கழிமாதம் 31 ந் திகதி வரைக்கும் இரண்டுவருடக் காலத்துக்கு உத்தியோகம் செய்யும்படி நியமிக்கும்பொருட்டு வதுளைக்கச்சேரியில் 1919 ம் ஆண்டு மாசிமாதம் 13 ந் திகதி பின்னேரம் ஒரு மணிக்கு ஓர் சபை கூடப்படுமென்று இத்தால் அறிவிக்கிறேன்.

சங்கத்தலைவர்களைத் தெரிதல்செய்தற்குச் சம்மதம்கொடுப்பவர்கள் தாங்களே கூட்டத்திற்கு வரவேண்டும். பிரதியாட்களை யனுப்புத லேர்க்கப்படமாட்டாது அங்கத்தவர்களாய் நியமிக்கப்பட விரும்புவோர் எழுத்துமூலமாகத் தங்தங் பேர்களைக கொடுத்தலுமன் திச் சம்மத மளிக்கத்தக்கவர்களாயிருக்கிற இரண்டு ஆட்களால் அவ்வெழுத்துப்பத்திரம் கையொப்பமிடப்பட்டு லோகல்போட் ஆபீசில் 1918 ம் ஆண்டு மார்கழிமாதம் 16 ந் திகதி அல்லது அதற்குமுன்னே கொடுக்கப்பட வேண்டும்.

எப் பாட்லெற்,
பெரிய ஏஜண்டுத்துரையவர்கள்.

வதுளைக் கச்சேரி,
1918 ம் ஆண்டு கார்த்திகை 8 ந் உ.

---

## தொழிலுக்குட்படாதவரின் அறிவித்தல்.

இன்றையிலிருந்து மூன்றுமாதத்திற்பின் சிஞகோறளை மெதபத்துவ அளுத்கம விதியாவத்தையில் இருக்கும் பியான் விடகே தொன் எலாறிஸ் ஆகிய நான் 1907 ம் ஆண்டில் 1 வது ஆடினன்ஸ் 8 வது பிரிவின்படி பதிவுகாரியகர்த்தர் அவர்களுக்கு என்னை சிலாவடிஸ்திரிக்கில் சிங்களப்பாஷையில் நொத்தாரிஸ் வேலைபார்க்க விடும்படி விண்ணப்பஞ் செய்ய எண்ணியிருக்கின்றேன் என்பதை இத்தால் அறிவிக்கிறேன்.

விதியவத்தை, அளுத்கம, பீ. தொன் எலாறிஸ்.
1918 ம் ஞு நவம்பர்மீ 2 ந் உ.

---

இதனைத்த மூன்று மாதத்தின் பின், யாழ்ப்பாணம் டிஸ்திரிக் வலிகாமங் கிழக்குப்பகுதி கோப்பாய் இறையிலுள்ள (தற்காலம் யாழ்ப்பாணம் சீதாரி) கந்தையா சோமசுந்தரம் ஆகிய நான் 1907 ம் ஆண்டின் 1 ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தின் 8 ம் பிரிவின் பிரகாரம் பதிவுகாரியகர்த்தர் அவர்கட்கு என்னை யாழ்ப்பாணம் டிஸ்திரிக்கில் தமிழ்ப்பாஷையில் நொத்தாரிசு வேலைபார்க்க விடும்படி விண்ணப்பஞ் செய்ய எண்ணியிருக்கிறேன் என்பதை இத்தால் அறிவிக்கின்றேன்.

இங்ஙனம், க. சோமசுந்தரம்.
யாழ்ப்பாணம், 1918 ம் ஞு ஐப்பசிமீ 21 ந் உ.

---

மட்டுக்களப்பு டிஸ்திரிக் மண்முனைப்பற்றுக கோட்டைமுனையிலிருக்கும் டேவிற் தம்பிமுத்து தம்பிஇராஜாவாகிய நான் 1907 ம் ஆண்டின் 1 ம் நம்பர் எட்டாம்பிரிவின் பிரகாரம் பதிவு காரியஸ்த தலைவர்கட்கு என்னை மட்டக்களப்பு டிஸ்திரிக்கில் தமிழ்ப்பாஷையில் வேலைபார்க்கும் நொத்தாரிசுவாக ஏற்றுக்கொள்ளும்படி இன்றைக்கு மூன்றுமாசங்களின்பின் விண்ணப்பஞ்செய்ய எண்ணியிருக்கிறேனென்பதை இத்தா லறிவிக்கிறேன்.

யாழ்ப்பாணம், டீ. டீ. தம்பிஇராஜா.
1918 ம் ஞு புரட்டாதிமீ 28 ந் உ.

---

அன்வெல்லை தற்காலம் இருக்கும் முல்லேரியாவகே பெம்பி குலத்திலக்க ஆகிய நான் 1907 ம் ஆண்டின் 1 ம் இலக்க கட்டளைச்சட்டப்படி I B அட்டவணையின் 2 ம் பிரமாணத்தின் பிரகாரம் அநுராசபுரம் டிஸ்திரிக்கில் சிங்கள பாஷையில் நொத்தாரிஸ் உத்தியோகம் நடத்த பதிவுகாரிய கர்த்தர் அவர்களுக்கு இதற்கு மூன்று மாதங்களின் பின் மனுப்பண்ண எண்ணியிருக்கிறேன் என்பதை இத்தால் அறிவிக்கிறேன்.

எம். பீ. குலத்திலக்க.

---

1907 ம் ஞு முதலாம் நம்பர் சட்டத்தின் எட்டாம் பிரிவில் கண்டபடி றெஜிஸ்டர் ஜெனறல் துரை அவர்களுக்கு என்னை கேகாலே டிஸ்திரிக்கு சிங்களபாஷையில் நொத்தாரிஸ் வேலைபார்க்க விடும்படி மூன்று மாசத்துக்குப் பின் விண்ணப்பம்செய்ய எண்ணியிருக்கிறேன் என்பதை நீர்கொழும்பு டிஸ்திரிக்கை சேர்ந்த யட்டியனயில் இருக்கும் வனசிஞ்ஞுஆராச்சிகே தொன் கிரிஸ்தோப்பர் ஆகிய நான் இத்தால் அறிவிக்கிறேன். வ. தொ. கிரிஸ்தோப்பர்.

யட்டியன,
1918 ம் ஞு ஐப்பசிமீ 7 ந் திகதி.

H. C. COTTLE, GOVERNMENT PRINTER, COLOMBO, CEYLON.